# ஜெயங்கொண்டம் நகராட்சி

<table>
<tr><th>Date of Meeting of the Council</th><th>MCR NO</th><th>SERIAL NUMBER AND SUBJECT IN THE AGENDA</th><th>DECISION OF THE COUNCIL</th></tr>
<tr><td>04.03.2019</td><td></td><td>ஜெயங்கொண்டம் நகராட்சியில் 2019ம் ஆண்டு மார்ச் மாதம் 04.03.2019ம் திங்கள் கிழமை காலை 11.00 மணியளவில் நடைபெற்ற சாதாரணக் கூட்டம்.<br>தனி அலுவலர்,<br>ஜெயங்கொண்டம் நகராட்சி</td><td></td></tr>
<tr><td>04.03.2019</td><td>60</td><td><u>பொருள் எண்.1</u><br>தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019ன் விதி 14ல் கட்டிட அனுமதி காலம் 5 ஆண்டுகள் மற்றும் ஒருமுறை காலநீட்டிப்பு காலம் 3 ஆண்டுகள் வழங்கிட வழிவகை செய்யப்பட்டுள்ளதால் கட்டிட அனுமதி கட்டணத்தை 5 ஆண்டுகளுக்கு வழங்குவதேற்பவும், கால நீட்டிப்பு காலத்தை 3 ஆண்டுகளுக்கு வழங்குவதகேற்பவும் கட்டண விகிதங்களை மாற்றியமைத்திட ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th rowspan="2">வ. எண்.</th><th rowspan="2">கட்டிட விபரம்</th><th colspan="2">5 ஆண்டுகள் அனுமதி காலம்</th><th colspan="2">ஒரு முறை கால நீட்டிப்பு 3 ஆண்டு களுக்கு</th></tr>
<tr><th>குடியிருப்பு 1 ச.மீ</th><th>குடியிருப்பு அல்லாதது 1 ச.மீ</th><th>குடியிருப்பு ச.மீ</th><th>குடியிருப்பு அல்லாதது 1 ச.மீ</th></tr>
<tr><td>1.</td><td>ஆர்.சி.சி. தரை கீழ் தளம்</td><td>ரூ.45.00</td><td>ரூ.100.00</td><td>ரூ.30.00</td><td>ரூ.45.00</td></tr>
<tr><td>2.</td><td>ஆர்.சி.சி. தரை தளம்</td><td>ரூ.50.00</td><td>ரூ.100.00</td><td>ரூ.30.00</td><td>ரூ.45.00</td></tr>
<tr><td>3.</td><td>ஆர்.சி.சி. தரை முதல் தளம்</td><td>ரூ.60.00</td><td>ரூ.125.00</td><td>ரூ.50.00</td><td>ரூ.60.00</td></tr>
<tr><td>4.</td><td>ஆர்.சி.சி. இரண்டாம் தளம்</td><td>ரூ.75.00</td><td>ரூ.150.00</td><td>ரூ.60.00</td><td>ரூ.75.00</td></tr>
<tr><td>5.</td><td>ஆர்.சி.சி. மூன்றாம் தளம்</td><td>ரூ.100.00</td><td>ரூ.150.00</td><td>ரூ.75.00</td><td>ரூ.100.00</td></tr>
</table>
அ) கழிவறை/குளியலறை/மல அறை ஒன்றிற்கு ரூ.150.00 ரூ.75.00<br>
ஆ) ACC ஷீட் மற்றும் ஓட்டு கட்டிடம் 1 ச.மீ ரூ. 50.00 ரூ.30.00<br>
இ) சுற்றுசுவர் கட்ட1 மீ (R.M) ரூ. 30.00 ரூ.20.00<br>
ஈ) கூடுதல் நகல் கட்டணம் ரூ.150.00<br>
<u>அலுவலக குறிப்பு :</u> ஒப்புதல் அளிக்கலாம்.<br>
நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 05.03.2019 தேதிய ந.க.எண். 31159/18/டிபி3 எண் சுற்றறிக்கையில் கட்டண விகிதங்களை திருத்தியமைத்து நடைமுறைப்படுத்திட அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு திருத்திய கட்டண விகிதங்களை தினசரி செய்தித்தாள் மற்றும் மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்திடவும் அதற்கான செலவினங்களை நகராட்சி நிதியில் மேற்கொள்ளவும் ஒப்புதல் அளிக்கலாம்.<br>
<u>ந.க.எண்.652/2019/அ4</u></td><td>அனுமதிக் கப்பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 04.03.2019 | **61** | **<u>பொருள் எண்.2</u>**<br>தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மாற்று கட்டிட விதிகள் 2019 னை அரசாணை நிலை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை(MA1) நாள்.04.02.2019ல் உத்திரவு பிறப்பிக்கப்பட்டு அதனை தமிழ்நாடு அரசிதழில் அரசிதழ் எண்.43 நாள்.04.02.2019ல் வெளியிடப்பட்டுள்ளது. மேற்கண்ட அரசாணை மற்றும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019னை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.<br>பொருள் எண்: 3(62) | பதிவு செய்யப்பட்டது |
| 04.03.2019 | **62** | **<u>பொருள் எண்.3</u>**<br>நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் 1508/2018/டிபி3 நாள்.03.10.2018 ல் நகராட்சி பகுதியிலுள்ள பூங்கா, விளையாடுமிடம் மற்றும் திறவிடங்களை விடுதலின்றி பட்டியலிட்டு தமிழ்நாடு பூங்கா விளையாடுமிடம் மற்றும் திறவிடம் ( பாதுகாத்தல் , முறைப்படுத்துதல் ) சட்டம் 1959 ன் கீழ் பிரசுரம் செய்ய திட்ட பிரேரணையினை அனுப்ப கோரப்பட்டுள்ளது.நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளவாறு பட்டியல் தயார் செய்யப்பட்டு பட்டியலில் கண்டவாறு பூங்காக்கள் , விளையாடுமிடம் மற்றும் திறவிடங்கள் ஆகியவற்றை அரசிதழில் அறிவிப்பு செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக அரசு முதன்மை செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களுக்கு அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு :</u>** அனுமதி வழங்கலாம்.<br>**<u>ந.க.எண்.1718/2019/அ4</u>** | அனுமதிக்கப்பட்டது |